6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள், அறிமுகம் செய்தல். 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

1994 மே 3]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) <u>சேலம் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 1994.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். திரு. அமர்நாத், எந்த அமைச்சர் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறாரோ, அந்த அமைச்சருக்குப் பக்கத்திலே இருக்கிற அமைச்சர்களிடத்திலேகூட, யாரும் செல்லக் கூடாது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)